செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்க எண்ணிக்கைகள்: 92 நாள்: 26.06.2025

## செம்மொழித் தமிழ் மின் நூலகம்

நடத்தும்

# செயற்கை நுண்ணறிவு உலகில் செம்மொழித் தமிழ்

# Classical Tamil in the World of Artificial Intelligence

## பயிலரங்கம் - 11

## (23.07.2025 - 29.07.2025)

## அறிவிப்பும் அழைப்பும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மாறிவரும் அறிவியல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மொழிசார்ந்த பல்வேறு ஆய்வு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, ஓலைச் சுவடிகள், தாட்சுவடிகள், அரிய பழம்பதிப்பு நூல்கள் ஆகியவற்றை எண்ணிமமாக்கல் (Digitization), எழுத்துணரியாக்கம் (OCR), அலைபேசிச் செயலி உருவாக்கம் (Mobile App), செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையில் ஒலிநூல் உருவாக்கம் (Audio Book), காணொளி உருவாக்கம் ஆகிய பணிகளைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

காலமாற்றத்திற்கேற்பப் புதுப்புதுத் தொழில்நுட்பங்களைப் புகுத்தித் தமிழ் மொழியை மேம்படுத்துவது இன்றியமையாதது. இதனைக் கருத்தில் கொண்டு **செயற்கை நுண்ணறிவு உலகில் செம்மொழித் தமிழ்** என்னும் தலைப்பிலான பயிலரங்கை நடத்தச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திப் படங்கள் வரைதல், காணொளிகள் உருவாக்குதல், எழுத்துணரியாக்கம், மொழிபெயர்ப்பு, தமிழ் மொழி கற்றல் கற்பித்தல், மெய்ந்நிகர் காட்சித் தொழில்நுட்பம் (VR), பெருந்தரவு (Big Data), உரையை எழுத்து வடிவமாக்கல் (Speech to Text), எழுத்தை உரைவடிவமாக்கல் (Text to Speech), தானியங்கிப் பேச்சுணரி (ASR) முதலான பொருண்மைகளில்

கணினித் தமிழ்த் தொழில்நுட்ப வல்லுநர்கள் உரையும் செயல்முறைப் பயிற்சியும் வழங்க உள்ளனர்.

பல்கலைக்கழகம்/கல்லூரிகளில் பணியாற்றும் **தமிழ்த்துறைப் பேராசிரியர்களை** இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 40
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 23.07.2025 முதல் 29.07.2025 வரை 7 நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்வோர் மடிக்கணினியோடு வருதல் நன்று.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/WYdfVCaupa31kppY7 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 15.07.2025 காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 16.07.2025 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் 26 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**